# யாழ்கோட்டையின் ஒல்லாந்தர் நினைவுக்கற்களுடாக அறியப்படும் வரலாறு

**Ms. Sivaruby Sajitharan**

University of Jaffna.

*sivaruby17@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:** *இலங்கை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் என தொடர்ச்சியாக நான்கு நூற்றாண்டுகளுக்கு மேலாக ஐரோப்பிய இனத்தவர்களது ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. இவ்ஐரோப்பியர்களது ஆதிக்கம் போர்த்துக்கேயர் 1621ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தை கைப்பற்றியது தொடக்கம் 1948இல் பிரித்தானியர் இலங்கையிலிருந்து விட்டுச் செல்லும் வரையான காலப்பகுதி வரை யாழ்ப்பாண பிரதேசத்திலும் நிலவியிருந்தது. இதன்விளைவாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் அரசியல், பொருளாதாரம், பண்பாடு என்பவற்றில் பல மாற்றங்கள் ஏற்பட்டதுடன் அவற்றை பிரதிபலிக்கும் பல தொல்லியல் மரபுரிமைகளை அடையாளம் காணமுடிகின்றது. இவ்ஐரோப்பியர் கால மரபுரிமைகளினை கிறிஸ்தவ தேவாலயங்கள், கோட்டைகள், வெளிச்சவீடுகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், நிர்வாக கட்டிடங்கள் என பலவாறு வகைப்படுத்திப் பார்க்க முடியும். இவ்வரிசையில் யாழ்கோட்டையில் அமைக்கப்பட்ட ஒல்லாந்தர் நினைவுக்கற்களும் குறிப்பிடத்தக்க முக்கியம் பெற்றவையாகும். இவ்ஒல்லாந்த நினைவுக்கற்கள் நீள்சதுர கருங்கல் பொழிவுகளில் தெளிவான முறையில் ஒல்லாந்த மொழியில் எழுத்துக்கள் மற்றும் உருவங்கள் செதுக்கப்பட்ட வகையில் உள்ளன. அவை ஒல்லாந்தர் ஆட்சியில் யாழ்பாணத்துடன் தொடர்புபட்ட நிர்வாக, இராணுவக் கட்டமைப்பினுள் பணியாற்றியவர்களின் இறப்பின் ஞாபகமாக அமைக்கப்பட்டவையாகும். யாழ்ப்பாணக்கோட்டை தேவாயத்தில் அமைக்கப்பட்டிருந்த ஓல்லாந்த நினைவுக்கற்கள் தற்போதைய நிலையில் கோட்டையிலிருந்து அகற்றப்பட்டு வேறு இடங்களிலேயே வைக்கப்பட்டுள்ளன. கோட்டையிலிருந்து அகற்றப்பட்டிருந்த இவ்நினைவுக்கற்கள் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றுள் 21 நினைவுக்கற்களினை வட்டுக்கோட்டை தேவாலய வளாகத்தினுள்ளும், 04 நினைவுக்கற்களினை யாழ்ப்பாண தொல்லியல் அருங்காட்சியகத்திலும் தற்போது காணமுடிகின்றது. மேலும் யாழ்கோட்டையில் அமைக்கப்பட்டதாக அறியப்பட்ட ஒல்லாந்த நினைவுக்கற்கள் சில காணமலும் போயுள்ளன. இந்தவகையில் 25 ஒல்லாந்த நினைவுக்கற்கள் மட்டுமே இவ்வாய்வில் சேர்க்கப்பட்டுள்ளன. ஒல்லாந்தர்கால யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக, சமய, பண்பாடு போன்ற பலமாற்றங்களினை ஓல்லாந்தரது நினைவுக் கல்வெட்டுக்கள் ஊடாக இனங்காண்பது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். மேலும் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்ட செய்திகளுடன் இக்கல்வெட்டுச் செய்திகளினை ஒப்பிட்டு ஆராய்வதும், ஐரோப்பிய வரலாறு பற்றிய ஆய்வுக்கு தொல்லியல் சின்னங்களை பயன்படுத்துவதன் அவசியத்தை உணர்த்தலும், யாழ்குடாநாட்டின் சுற்றுலாத்துறைக்குரிய மரபுரிமைகளாக இவ்நினைவுக்கற்களினை அடையாளப்படுத்தலும் இவ்வாய்வின் நோக்கங்களாகும். இவ்வாய்வின் நோக்கங்களினை நிறைவு செய்வதன் பொருட்டு, ஆய்வுக்கான முதன்மை தரவுகள் கள ஆய்வுகளின் அடிப்படையில் திரப்பட்டதாகும். குறிப்பாக நேரடியாக இவ்கல்வெட்டுக்கள் அமைந்திருந்த யாழ்ப்பாணக்கோட்டை மற்றும் தற்போது கல்வெட்டுக்கள் காணப்படும் வட்டுக்கோட்டை தேவாலய வளாகம் மற்றும் யாழ்ப்பாண தொல்லியல் அருங்காட்சியகம் என்பவற்றுக்கு களப்பயணங்களை மேற்கொண்டு, நேரடி அவதானிப்பின் மூலமாக தரவுகள் பெறப்பட்டதுடன், ஒல்லாந்தர் நினைவுக் கல்வெட்டுக்கள் குறிப்பிடப்படும் செய்திகள் ஊடாக புதிய வரலாற்றுச் செய்திகளை வெளிப்படுத்தும் தேடல் அடிப்படையிலான ஆய்வாகவே இவ்வாய்வு அமைகின்றது. அத்துடன் இவ்வாய்வினை எழுதுவதற்கு இரண்டாம் நிலைத் தரவுகளாக யாழ்குடாநாட்டின் ஒல்லாந்தர் கால மரபுரிமைகள் பற்றிக் குறிப்பிடும் நூல்கள், கட்டுரைகள் என்பனவும் உதவியுள்ளன. யாழ்கோட்டை ஒல்லாந்தர் கால நினைவுக்கற்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒல்லாந்த மொழி செய்திகளுடாக ஒல்லாந்தர் நிர்வாகமுறை, பதவிப்பெயர், ஆட்சிக்காலம், இராணுவக்கட்டமைப்பு, மதம், சமூக அமைப்பு, கட்டிடக்கலை, வர்த்தகம், நினைவுக்கல் அமைக்கும் மரபு, எழுத்து, மொழி, ஒல்லாந்தர்களது ஆட்சி விஸ்தரிப்பு போன்ற பல்வேறுபட்ட செய்திகளை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறு இவ்நினைவுக்கற்களின் வரலாற்று முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துவதன் ஊடாக, அவற்றினை யாழ்கோட்டை மற்றும்*

*யாழ்கோட்டை தேவாலயத்துடன் இணைந்தவகையில் யாழ்குடாநாட்டின் கலாசார சுற்றுலாவுக்குரிய வளமாகவும் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.*

**திறவுச்சொற்கள்:** ஒல்லாந்தர், யாழ்ப்பாணக்கோட்டை, யாழ்கோட்டைத் தேவாலயம், நினைவுக்கற்கள்

## 1. அறிமுகம்

யாழ்ப்பாணக்குடாநாடு தொடர்ச்சியாக 327 ஆண்டுகள் போர்த்துக்கேயர் (1621 – 1658), ஒல்லாந்தர் (1658 – 1797), பிரித்தானியர் (1797 – 1948) என மூன்று ஐரோப்பிய இனத்தவர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. ஐரோப்பியர்கள் ஆட்சிக் காலப்பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாடனது அரசியல், பொருளாதார, சமூக, சமய, பண்பாடு போன்ற பல்வேறு துறைகளிலும் பலமாற்றங்களை சந்தித்திருந்தது. இவ்மாற்றங்களை ஐரோப்பியர் ஆட்சிக்கால தொல்லியல் மரபுரிமைகளான கல்வெட்டுக்கள், நாணயங்கள், மரபுரிமைச் சின்னங்கள் ஊடாகவும் இனங்காண முடிகின்றது. அந்தவகையில் 1658ஆம் ஆண்டு தொடக்கம் 1796ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தினை ஆட்சி செய்த ஒல்லாந்தர்களது கல்வெட்டுக்கள் புலப்படுத்தும் வரலாறு பற்றி ஆராய்வதாகவே இவ்வாய்வு அமைகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஐரோப்பியரது கல்வெட்டு மரபானது பெரும்பாலும் சமூகத்தில் முக்கியம் பெற்ற இறந்தவர்களுக்கு நினைவுக்கல் அமைப்பதையே குறித்து நிற்கின்றது. தென்னாசியாவில் நினைவுக்கற்கள் அமைக்கும் மரபு நீண்ட பாரம்பரிய வரலாறு கொண்டது. பெரிய பெரிய கற்களைக் கொண்டு இறந்தவர்களுக்கு ஈமச்சின்னங்களை அமைக்கும் ஏறக்குறைய கி.மு 1000ஆம் ஆண்டு தொன்மை வாய்ந்த பெருங்கற்காலமே இவ்நினைவுக்கற்கள் அமைக்கும் மரபிற்கு அடிப்படையாக அமைந்தது. பெருங்கற்காலத்திற்குரிய பண்பாட்டுச் சின்னங்களில் ஒன்றாகவே இறந்தவர்களுக்கு நடுகல் (நினைவுக்கல்) அமைக்கும் வழக்கம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக தமிழகத்தில் கொடுமணல் என்ற இடத்தில் கற்பதுக்கை என அழைக்கப்படும் பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் கண்டுபிடிக்கப்பட்ட நெடிய கற்கள் இதற்கு சிறந்த சான்றாக குறிப்பிட முடியும். இவற்றின் வளர்ச்சி நிலையையே சங்க இலக்கியத்தில் விபரிக்கப்படும் நெடுநிலை நடுகல்லு எனத் தொல்லியாளர்கள் கருதுகின்றனர் (இராஜன்.கா. 1994. 9 -10). இதன் தொடர்ச்சியாகவே சங்ககால நடுகல் வழிபாட்டினையும் காணமுடிகின்றது. சங்கஇலக்கியங்களில் நடுகற்கள் தொடர்பாக வரும் செய்திகளை பரவலாக காணமுடிகின்றது. இதனை புறநானூற்றில் ஒன்பது இடங்களிலும் (செய்யுள் எண்: 3, 221, 223, 232, 261, 264, 306, 314, 329), அகநானூற்றில் பதினான்கு இடங்களிலும் (செய்யுள் எண்: 35, 67, 91, 109, 151, 157, 215, 231, 269, 289, 297, 343, 365, 387), ஐங்குறுநூறில் இரண்டு இடங்களிலும் (109, 152, 363), குறுந்தொகையில் இரண்டு இடங்களிலும் (செய்யுள் எண்: 77, 372), நற்றிணை (352), மலைபடுகடாம் (388) ஆகியவற்றிலும் நடுகற்கள் பற்றிய செய்தியினை காணமுடிகின்றது (Rajan. K. 2000. 26 – 29).

பொதுவாக இறந்த வீரனுக்கு மட்டுமே பண்டைக்காலத்தில் நடுகல் அமைத்து வழிபடப்பட்டதாகக் கருதும் மரபு நீண்டகாலமாக இருந்து வருகின்றது. ஆனால் அண்மைக்காலங்களில் தமிழகத்தில் உள்ள செங்கம் தருமபுரி மாவட்டங்களில் கிடைத்த கல்வெட்டு ஆதாரங்களில் இருந்து சமூகத்தில் பலதரப்பட்ட மக்களுக்கும் பல தரப்பட்ட தொழில் புரிந்தோருக்கும் நடுகல் அமைத்து வழிபடப்பட்டமை தெரிய வந்துள்ளது. இதனால் இவற்றை வீரக்கல் (Hero stone) என்று அழைப்பதைவிட நினைவுக்கல் (Memorial stone) என்று அழைப்பதே பொருத்தமானதாகும். இதன் இன்னொரு வெளிப்பாடே யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட சமாதி கோவில்களாகும். இந்தவகையில் தென்னாசியாவில் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலந்தொட்டே இவ்நினைவுக்கற்கள் அமைக்கும் மரபு காணப்பட்டதுடன், இம்மரபு இலங்கையிலும் தொடர்ந்ததற்கான சான்றுகள் உண்டு. இதனால் யாழ்ப்பாணக் கோட்டையில் ஒல்லாந்தர் நினைவுக்கற்கள் அமைப்பதற்கு முற்பட்ட காலங்களிலும் சமகாலத்திலும் இங்கும் நினைவுக்கற்கள், சமாதிகள் அமைக்கும் மரபு நிலவியதனை அவதானிக்க முடிகின்றது. இதனை அநுராதபுரத்தில் துட்டகைமுனு மன்னனால் எல்லாள மன்னனுக்கு அமைக்கப்பட்ட சமாதி மற்றும் சோழர் காலப் பள்ளிப்படைக் கோயில்கள் என்பவற்றிலும் காணலாம். இம்மரபு ஒல்லாந்தருக்கு சமகாலத்தில் பின்பற்றப்பட்டதற்கு யாழ்ப்பாண பிராந்தியத்தில் இணுவிலில் அமைந்துள்ள காரைக்கால் சிவன் கோயில் சமாதிகள் சிறந்த உதாரணமாகும்.

இச்சிவனாலயமானது அமைந்துள்ள பின்னணி நிலமானது இடுகாட்டு அடக்கமுறையைக் கொண்டது (கிருஸ்ணராஜா. செ. 2000).

இவ்வாறாக எல்லாச் சமூகங்களிலும், பொதுவெளிகளிலும் நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டிருந்தது என்பது சாதாரணமான ஒரு நிகழ்வாகும். எனினும் இவற்றிற்கிடையே அவையாக்கப்படுவதற்கான காரணிகள் தொடர்பான வேறுபாடுகளும், பௌதீக ரீதியான வேறுபாடுகளும் காணப்படும். இலங்கையைப் பொறுத்த வரையிலே ஆவணப்படுத்தப்பட்ட அதன் வரலாற்றுக்காலத்திலும் குறிப்பாக அதற்கு முற்பட்ட வரலாற்றுதயகாலந் தொடக்கம் நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டு வந்திருக்கின்றன. இந்தவகையில் ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியில் கூட அவர்களுடன் தொடர்புபட்ட வகையில் இந்நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு சிறந்த உதாரணமாக ஒல்லாந்தர் ஆட்சியில் யாழ்ப்பாணக் கோட்டையில் அமைக்கப்பட்ட நினைவுக்கற்கள் அமைகின்றன.

வடஇலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தின் போது, யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை, பூநகரி, மன்னார் போன்ற இடங்களில் அமைக்கப்பட்ட பெரிய கோட்டைகள் தவிர கொழும்புத்துறை, கச்சாய், ஆனையிறவு, இலுப்பைக்கடவை ஆகிய இடங்களில் பல சிறிய கோட்டைகள் அமைக்கப்பட்டது (இராசநாயகம்.செ.1999.187). இவை இராணுவத் தேவையுடன் வர்த்தகத் தேவையும் ஒருங்கே பூர்த்தி செய்யும் நோக்குடன் செயற்பட்டன. போர்த்துக்கேயரிடமிருந்து கரையோரப் பிரதேசங்களை கைப்பற்றிய பிற்பாடு பெரும்பாலும் அதேயிடங்களில் ஒல்லாந்த கோட்டைகள் அமைக்கப்பட்டன. ஒல்லாந்தரது கட்டிடக்கலை சிறப்பினையும் தொழில்நுட்பத்தினையும் அவர்களால் அமைக்கப்பட்ட கோட்டைகள் மற்றும் தேவாலாய கட்டிட கலை மரபில் சிறப்பாக காணலாம். 1658இற்கு பின்னர் முற்றுமுழுதாக ஒரு புதிய பாணியில் ஒல்லாந்தரின் தொழினுட்ப திறன் வாய்ந்த கோட்டை அமைப்பு முறையிலான கட்டிட கலைமரபு காணப்படுகின்றது (Nelson.A.1984).

இலங்கையில் அமைக்கப்பட்ட கோட்டைகளில் யாழ்ப்பாணக்கோட்டைக்கு முக்கிய இடமுண்டு. யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கு தெற்கே கடல் நீரேரியுடன் இணைந்ததாக இக்கோட்டை அமைந்துள்ளது. இவ்வாறு கடல்நீரேரியின் விளிம்பில் கடல் மார்க்கமாக வரும் எவரும் நகரத்துக்குள் பிரவேசிக்கும் இடத்தின் வாயிலில் இக்கோட்டை அமைக்கப்பட்டிருந்தது. 1624 அளவில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண பட்டினத்தில் ஒரு கோட்டை அமைக்கத் தொடங்கி, 1632ஆம் ஆண்டு யாழ்ப்பாணக்கோட்டை கட்டிமுடிக்கப்பட்டதாக அறியமுடிகின்றது (Martyn.H. 2002). இலங்கையில் உள்ள கோட்டைகளில் இரண்டாவது மிகப்பெரிய கோட்டையாகிய யாழ்ப்பாணக்கோட்டை கட்டிடக்கலை, தொழில்நுட்பத்தில் பெரும்சிறப்பு வாய்ந்தது. இதனையே 1984இல் நெல்சன் என்பவரால் எழுதப்பட்ட "Dutch Forts of Sri Lanka" எனும் நூலில் யாழ்ப்பாணக்கோட்டை பற்றி குறிப்பிடும் போது இத்தொழில்நுட்பக்கோட்டை ஒல்லாந்தரின் சிறந்த தெரிவு என்றார். கிழைத்தேசத்திலேயே பலம் வாய்ந்த கோட்டைகளில் இதுவும் ஒன்றாகும். சமகாலத்தில் பீரங்கிகளைக் கொண்டு யுத்தம் செய்யும் முறை பரவலாகப் பின்பற்றப்பட்டதால் இது ஒரு சிறந்த தற்காப்புடன் அமைக்கப்பட்ட கோட்டை என்று குறிப்பிட்டிருந்தார் (Nelsan.A.1984).

சதுர வடிவில் போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட யாழ்கோட்டையினை ஒல்லாந்தர் நட்சத்திர வடிவில் மாற்றியமைத்தனர். அக்கோட்டையில் பிரித்தானியர் தமது ஆட்சியினை ஏற்படுத்தியிருந்தாலும் அவை ஒல்லாந்தர் காலக் கோட்டையின் அடிப்படைத் தோற்றத்தில் பெரியளவிலான மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. இதனால் இக்கோட்டை ஒல்லாந்தர் கோட்டையென அழைக்கப்படுகின்றது. ஒல்லாந்தர் ஆட்சியில் கொழும்பு, காலி, கோட்டைகள் ஒரு நகரமாகச் செயற்பட்ட போது யாழ்ப்பாணக்கோட்டை இராணுவ, நிர்வாக மையமாக செயற்பட்டது. 62 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள இக்கோட்டையின் வெளிப்புறச் சுவர்கள் ஒவ்வொன்றும் கீழ்ப்பகுதி 40 அடி அகலமும் மேற்பகுதி 20 அடி அகலமும் 30 அடி உயரமும் கொண்டவை. இவ்வெளிப்புறச் சுவர்களைச் சுற்றி ஆழமான அகழிகள் காணப்படுகின்றன. நான்கு பக்கமும் பாரிய பீராங்கித் தளங்களையும், பாதுகாப்பு அரண்களையும், காவற்கோபுரங்களையும், சுரங்கங்களையும், சுடுகள தளங்களையும் கொண்ட இக்கோட்டையைச் சுற்றி இரண்டு மைல் தொலைவில் 200 போர்த்துக்கேயப் படைவீரர்களும், உள்ளூர்ப் படைவீரர்களும் பாதுகாப்பிற்காக நிறுத்தப்பட்டிருந்ததாக போர்த்துக்கேய ஆவணங்கள் தெரிவிக்கின்றன. 34 ஏக்கரில் அமைந்த கோட்டையின் உட்பகுதியில் நிர்வாக மையங்களும், படைவீரர்களின் இருப்பிடங்களும், ஆயுத களஞ்சிய அறைகளும், ஒல்லாந்தர் கால தேவாலயமும், பிரித்தானியர் ஆட்சியில் யாழ்ப்பாணத்தை நிர்வகித்த ஆளுனர்

மாளிகையும் (Queen House), சிறைச்சாலைகள், பிற நிர்வாக கட்டிடங்கள் என்பன அமைக்கப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணக்கோட்டையின் புறச்சுவர்களிலும் வேறுசில இடங்களிலும் பழைய கால கட்டிடப் பகுதிகள் உள்ளதெனக் கூறப்படுகின்றது. இன்றைய கோட்டையின் ஆரம்பம் தமிழரசர் காலத்தில் ஏற்பட்டிருக்க முடியும் என்றும் பின்பு இவ்விடத்தில் ஒரு கோட்டை போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்டு அது பின்பு ஒல்லாந்தரால் திருத்திக் கட்டப்பட்டிருக்க முடியும் (இராசநாயகம்.செ.1999. 186). இதனால் யாழ்ப்பாணக்கோட்டை அமைந்துள்ள பகுதி முக்கியத்துவமுடைய பிரதேசமாக விளங்கியிருக்க முடியும். இதனை அங்கு கண்டெடுக்கப்பட்ட சோழர்கால கல்வெட்டு மற்றும் இந்து ஆலய கட்டிடப் பாகங்கள் என்பன உறுதிப்படுத்தியுள்ளன. இதனை மேலும் உறுதிப்படுத்துவதில் சமகால தொல்லியல் ஆய்வுகளும் முக்கிய பங்கு வகித்திருந்தன. இந்தவகையில் இங்கு கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்கால கறுப்பு – சிவப்பு நிற மட்பாண்டங்கள், நரைநிறமட்பாண்டங்கள், மற்றும் பல்வேறு கால கட்டத்தைச் சேர்ந்த உள்நாட்டு, வெளிநாட்டு மட்பாண்டங்கள், உள்நாட்டு, வெளிநாட்டு நாணயங்கள், இந்து ஆலயங்களின் அழிபாடுகள், கலைவடிவங்கள் என்பன குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெற்றனவாகும் (Davis, C. et al., 2019).

ஒல்லாந்தரால் மீளமைக்கப்பட்ட அக்கோட்டையில் அவர்கள் தேவாலயம் சிறந்தது அதாவது ஒல்லாந்தரால் யாழ்ப்பாணக்குடாநாட்டில் அமைக்கப்பட்ட தேவாலயங்கள் எல்லாவற்றினையும் விட கோட்டையில் அமையப் பெற்றிருந்த தேவாலயம் ஒல்லாந்தரின் கட்டிடக்கலை மரபை சிறப்பாக பிரதிபலிப்பதாகவும், வரலாற்று முக்கியத்துவம் பெற்றதாகவும் விளங்குகின்றது. கோட்டையில் அமைக்கப்பட்ட தேவாலயம் தவிர யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் தேவாலயங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவை பொதுவாக போர்த்துக்கேயரது கத்தோலிக்க தேவாலயங்கள் காணப்பட்ட இடங்களிலேயே அமைக்கப்பட்டது. ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட தேவாலயங்களில் வட்டுக்கோட்டை, பளை, தும்பளை, அச்சுவேலி, தெல்லிப்பளை, ஊர்காவற்துறை, யாழ்நகரப்பகுதி, மல்லாகம், சங்கானை, பண்டத்தரிப்பு, தையிட்டி போன்ற இடங்களில் அமைக்கப்பட்டவை குறிப்பிட்டுச்சொல்லக் கூடியவையாகும் (Phillipu Baldaeus 1672.316, 322). எனினும் கோட்டை தேவாலயம் இவை எல்லாவற்றையும் விட ஒல்லாந்தரின் கட்டிடக்கலை சிறப்பினை பிரதிபலிப்பதாகவும், காலஅடிப்படையில் இலங்கையில் இருந்த ஒல்லாந்த தேவாலயங்களுள் பழமை வாய்ந்ததாகவும் விளங்குகின்றது. பிரதான வாயிலின் மேல் 1706 என்று திகதியிடப்பட்டாலும் இந்த இடத்தில் முன்பு ஒரு தேவாலயம் இருந்திருக்கலாம் (Lewis.P.J.1913.215). அதாவது போர்த்துக்கேயரால் முதலில் இங்கு அமைக்கப்பட்ட கத்தோலிக்க தேவாலயம் போர்த்துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்ட பின்பு புரட்டஸ்தாந்து தேவாலயமாக மாற்றப்பட்டது என அறியக்கிடக்கிறது. அத்துடன் 1666, 1672, 1673 என ஆண்டுகள் பொறிக்கப்பட்ட ஒல்லாந்த நினைவுக்கற்கள் கிடைக்கப்பெற்றிருப்பதும், ஒல்லாந்தருக்கு முற்பட்டகால நினைவுக்கற்களின் எச்சங்கள் கோட்டையின் வேறு பகுதிகளில் கிடைக்கப்பெற்றிருப்பதும் இக்கருத்தை மேலும் உறுதிப்படுத்துகின்றது. யாழ்கோட்டை தேவாலயத்தின் தரைத்தோற்றம் கிரேக்க சிலுவை வடிவில் அமையப்பெற்று பரந்த மையப்பகுதியினையும் கொண்டது. அங்கு ஒல்லாந்த குடும்பங்களுக்கான தனித்தனியான ஆசனங்களுண்டு. பிற்காலத்தில் இவ்விருக்கைகள் சுவருடன் வைக்கப்பட்டது. சுவர்கள் நான்கு தொடக்கம் ஐந்து அடி தடிப்புடையதாகவும், அவை முருகைகற்களினால் அமைக்கப்பட்டு சீமெந்தினால் பூசப்பட்டிருந்தது. இத்தேவலாயம் 600 பக்தர்கள் தங்ககூடிய இடவசதியினையும் கொண்டிருந்ததுடன், இறக்குமதி செய்யப்பட்ட டச்சு செங்கற்களைக் கொண்டு தூண்கள், வளைவுகள் மற்றும் நுழைவாயில்கள் அமைக்கப்பட்டிருந்தன (Martyn.H.2002, Kulenthiran.1967, De Silva.R, Beumer.G.M. 1988). அத்துடன் இத்தேவாலயத்தில் பெரிய கல்லறைக்கற்கள் வைக்கப்பட்ருந்ததுடன் அவற்றுள் ஒல்லாந்த மொழியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தது (Kulenthiran.1967.06, 07).

யாழ்ப்பாணக்கோட்டை 14959 – 5/21/1971 எனும் இலக்கத்தில் ஒரு தொல்லியல் மரபுரிமைச் சின்னமாக தொல்லியல் திணைக்களத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்த போது, கோட்டையின் ஒரு பகுதியாக அதன் மத்தியில் அமைந்திருந்த தேவாலயமும் அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. கோட்டையில் அமைந்துள்ள இத்தேவாலயம் உள்நாட்டு யுத்த சூழலின் போது முற்றாக சிதைவடைந்த நிலையில், அதன் கலைமரபு பற்றி அறிந்து கொள்ள முடியாத அளவிற்கு வெறும் கற்குவியல்களாக காணப்படுகின்றது. இக்கற்குவியல்களில் தேவாலயத்தின் சுவர்ப்பகுதிகள் ஏனைய யாழ்குடாநாட்டு தேவாலயங்களை விட கோட்டை கட்டிடக்கலை மரபிற்குரியதாக உயரமானவையாகவும், அகலமுடையவையாகவும் காணப்பட்டிருக்கும் என்பதனை அடையாளப்படுத்த முடிகின்றது.

இத்தேவாலயத்தில் அமையப்பெற்றதாக அறிய முடியும் ஒல்லாந்தர்கால நினைவுக் கற்களும் குறிப்பிடத்தக்க முக்கியம் பெற்றவையாகும்.

## 2. ஆய்வின் நோக்கம்

ஒல்லாந்தர் ஆட்சிக் காலப்பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாடனது அரசியல், பொருளாதார, சமூக, சமய, பண்பாடு போன்ற பல்வேறு துறைகளிலும் பலமாற்றங்களை சந்தித்திருந்தது. இவ்மாற்றங்களை ஒல்லாந்தரது நினைவுக் கல்வெட்டுக்கள் ஊடாக இனங்காண்பது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். மேலும் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்ட செய்திகளுடன் இக்கல்வெட்டுச் செய்திகளினை ஒப்பிட்டு ஆராய்வதும், ஐரோப்பிய வரலாறு பற்றிய ஆய்வுக்கு தொல்லியல் சின்னங்களை பயன்படுத்துவதன் அவசியத்தை உணர்த்தலும், யாழ்குடாநாட்டின் சுற்றுலாத்துறைக்குரிய மரபுரிமைகளாக இவ்நினைவுக்கற்களினை அடையாளப்படுத்தலும் இவ்வாய்வின் நோக்கங்களாகும்.

## 3. ஆய்வு முறையியல்

யாழ்கோட்டையின் ஒல்லாந்தர் நினைவுக்கற்களூடாக அறியப்படும் வரலாறு எனும் இவ்வாய்வின் நோக்கங்களினை நிறைவு செய்வதன் பொருட்டு, ஆய்வுக்கான முதன்மை தரவுகள் கள ஆய்வுகளின் அடிப்படையில் திரப்பட்டதாகும். குறிப்பாக நேரடியாக இக்கல்வெட்டுக்கள் அமைந்திருந்த யாழ்ப்பாணக்கோட்டை மற்றும் தற்போது கல்வெட்டுக்கள் காணப்படும் வட்டுக்கோட்டை தேவாலய வளாகம் மற்றும் யாழ்ப்பாண தொல்லியல் அருங்காட்சியகம் என்பவற்றுக்கு களப்பயணங்களை மேற்கொண்டு, நேரடி அவதானிப்பின் மூலமாக தரவுகள் பெறப்பட்டதுடன், ஒல்லாந்தர் நினைவுக் கல்வெட்டுக்கள் குறிப்பிடப்படும் செய்திகள் ஊடாக புதிய வரலாற்றுச் செய்திகளை வெளிப்படுத்தும் தேடல் அடிப்படையிலான ஆய்வாகவே இவ்வாய்வு அமைகின்றது. அத்துடன் இவ்வாய்வினை எழுதுவதற்கு உதவிய இரண்டாம் நிலைத் தரவுகளாக Penry Lewis.J என்பவர் எழுதிய Tombstones and Monuments in Ceylon என்ற நூலும், இலங்கைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்க வெளியீடாகிய இளங்கதிரில் வெளிவந்த யாழ்ப்பாணத்துச் சாசனங்கள் என்னும் க.இந்திரபாலா அவர்களது ஆக்கமும் அமைகின்றன. அத்துடன் தொல்லியல் சிறப்புக் கலைமாணி கற்கை நெறியினை நிறைவுசெய்வதன் பொருட்டு ''யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஐரோப்பியர் கால கல்வெட்டுக்கள் - ஓர் ஆவணத் தொகுப்பு'' என்ற தலைப்பில் இக்கட்டுரை ஆசிரியரால் 2009இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரையும் இவ்வாய்வுக்கான தரவாக அமைந்துள்ளது.

## 4. ஆய்வு முடிவுகள்

ஒல்லாந்த கலைமரபை பிரதிபலித்து நிற்கும் யாழ்ப்பாணக்கோட்டையில் அமைக்கப்பட்ட தேவாலயம், தற்போதைய நிலையில் இடித்தழிக்கப்பட்ட நிலையில் கற்குவியல்களாகவே அடையாளம் காணமுடிகின்றது. யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்த ஒல்லாந்த நினைவுக்கற்கள் உள்நாட்டு யுத்த சூழ்நிலையின் போது அங்கிருந்து அகற்றப்பட்டிருந்தது. யாழ்கோட்டையிலிருந்து அகற்றப்பட்ட இவ்நினைவுக்கற்கள் யாழ்ப்பாணத்தின் ஏனைய பிரதேசங்களிலிருந்து பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போதைய நிலையில் அவற்றுள் 21 நினைவுக்கற்கள் வட்டுக்கோட்டை தேவாலய வளாகத்தின் உள்ளும், 04 நினைவுக்கற்கள் யாழ்ப்பாண தொல்லியல் அருங்காட்சியகத்திலும் காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி யாழ்கோட்டைத் தேவாலயத்தில் ஒல்லாந்தர் ஆட்சிக்கு முற்பட்ட, பிற்பட்ட காலங்களில் அமைக்கப்பட்டதான நினைவுக்கற்களின் எச்சங்களினையும் யாழ்கோட்டைப் பகுதிகளில் அவதானிக்கமுடிகின்றது. அவை எழுத்துக்கள் தெளிவில்லாத நிலையிலேயே காணப்படுகின்றன. ஆகவே யாழ்கோட்டையில் அமைக்கப்பட்டிருந்த ஒல்லாந்த நினைவுக்கற்களினை முழுமையாக ஆய்வுக்குட்படுத்த முடியாத நிலையில் 25 நினைவுக்கற்களே ஆய்வில் சேர்க்கப்பட்டுள்ளது. இவ்நினைவுக்கற்கள் பொதுவாக ஆறு தொடக்கம் எட்டு அடி நீளத்தினையும், மூன்று தொடக்கம் நான்கு அடி அகலத்தினையும் கொண்டு, கருங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஒல்லாந்த மொழியில் எழுத்துக்கள் மற்றும் குறியீடுகள், சின்னங்கள், உருவங்கள் என்பனவும் தெளிவான முறையில் அக்கற்களில் பொறிக்கப்பட்டுள்ளன. அவை இயந்திர உதவியுடன் அக்கற்களில் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். யாழ்கோட்டை ஒல்லாந்தர் நினைவுக்கற்கள் இராணுவ படைத்தளபதிகள் மற்றும் ஒல்லாந்த ஆட்சியில் யாழ்ப்பாணத்துடன் தொடர்புபட்ட

ஒல்லாந்தர்கள் ஆகிய பல தரப்பட்டவர்களின் இறப்பின் ஞாபகமாக அமைக்கப்பட்டதாகும். இவ்நினைவுக்கற்கள் ஒல்லாந்தரால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளை அறிந்து கொள்ளும் நம்பகத்தன்மையுடைய ஓர் சான்றாதாரமாக விளங்குகின்றது.

முதலில், யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தரால் மேற்கொள்ளப்பட்ட ஆட்சிமுறை, நிர்வாக கட்டமைப்பு என்பவற்றை அறிந்து கொள்வதிலும், அவை பற்றி வரலாற்று இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருந்த செய்திகளை ஒப்பிட்டு ஆராய்வதிலும் இவ்யாழ்கோட்டை ஒல்லாந்த நினைவுகற்கள் வகிக்கும் பங்களிப்பு பற்றி நோக்குவோம். குறிப்பாக இலங்கையில் ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்ட பகுதிகளை நிர்வகிக்க டச்சுக்கிழக்கிந்தியக் கெம்பனியின் தலைமையின் கீழ் கொழும்பில் ஒரு பிரதிநிதி நியமிக்கப்பட்டிருந்தார். ஓல்லாந்தரின் இலங்கை நிர்வாகம் கொழும்பிலிருந்த தேசாதிபதியொருவரின் கீழேயே நிர்வகிக்கப்பட்டு வந்தது. அத்துடன் தமது ஆட்சிக்குட்பட்ட இலங்கையினை யாழ்ப்பாணக் கொமாண்டரி, கொழும்புக் கொமாண்டரி, காலிக்கொமாண்டரி என மூன்று பிரிவுகளாக பிரித்திருந்தனர். கொழும்புக் கொமாண்டரி தேசாதிபதிக்குக் கீழுமும், ஏனைய இரண்டு கொமாண்டரிகளும் தனித்தனி தளபதிகளின் தலைமையில் தேசாதிபதியின் கட்டுப்பாட்டில் இருந்தன. இலங்கையில் ஒல்லாந்தரால் மேற்கொள்ளப்பட்ட அரசியல், நிர்வாக, பொருளாதார, சமய நடவடிக்கைகளின் வெற்றிக்கு றிக்ளொப் வான் கோன்ஸ் (Rijklof van Goens) என்பவரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். இவர் 1658இல் தளபதியாகவும், 1665இல் தேசாதிபதியாகவும் நியமிக்கப்பட்டிருந்தார். இவரைத்தொடர்ந்து முக்கியம் பெற்றவர்களாக லோறன்ஸ் பில் (Laurens pyl) (1680 – 1692), பறொண் வொன் இன்கொப் (Baron Von Inhoff) (1736 – 1740), யன் சுருடர் (Jan Schreder) (1757 – 1763) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர் (குணசிங்கம். மு. 2008. 255 - 259). இவ்வகையில் யாழ்கோட்டை நினைவுக்கற்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் VOC என்ற பதமும் சர்ஜென்ற் (Sergeant) ஆளுனர், படைத்தலைவர் (Captain Lieutenant, Commandeur) போன்ற பதவிப் பெயர்களும், கணக்காளர் அல்லது தலைமை எழுதுவினைஞர், நூலக மேற்பார்வையாளர், வர்த்தக பண்டக் காப்பாளர் மற்றும் கிழக்கிந்திய கம்பனிசார் Sergeant போன்ற பதவிப் பெயர்கள் ஒல்லாந்தரின் நிர்வாக முறையையும், இராணுவ கட்டமைப்பையும் குறித்து நிற்கின்றது. அவ்வகையில் Rycloff Van Goens என்ற இலங்கை ஆளுனரும், Gallant Jean Francois Even Duhil, லோறன்ஸ் பில் (Laurens Pyl), சூசன்னா பிளொம் (Susanna Blom), Barent Van Schhuylen Burg, அந்தோணி மூயர் (Anthony Mooyaart) என்ற படைத்தலைவர்களும், Floris Blom என்ற படைகளின் உதவி அட்மிரல் Friedrich Wilhelm Boronde Reder என்ற கிழக்கிந்திய கம்பனிசார் Sergeant, Aanout Wirman என்ற வர்த்தக பண்டக் காப்பாளர் மற்றும் Gerardus Van Rhee என்ற கணக்காளர் அல்லது தலமை எழுதுவினைஞர், நூலக மேற்பார்வையாளர் போன்றவர்களது பதவியுடன் கூடிய பெயர்களை யாழ்கோட்டை நினைவுக்கற்களிலிருந்து அறியமுடிவது, ஒல்லாந்தர்களால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட நிர்வாக கட்டமைப்பினையும், அவர்கள் ஆட்சியில் படைத்தலைவர்களுக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் மற்றும் இராணுவக்கட்டமைப்பு போன்ற செய்திகளினை அறிய முடிகின்றது. மேலும் ஒல்லாந்தர்கள் தமது தாய் நாடான ஒல்லாந்த தேசத்திலிருந்து வருகைதந்து இந்தியா, இலங்கை போன்ற இடங்களில் நீண்டகாலம் தங்கியிருந்து நிர்வாக நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததனையும் இக்கல்வெட்டுகளூடாக அறியமுடிகின்றது. உதாரணமாக ஒல்லாந்தர் ஆட்சிக் காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பட்டினத்திலேயே பிறந்து (1738), அங்கேயே மரணித்த (1766) Johanna Verwyk உடைய நினைவுக்கல் மற்றும் தென்னிந்தியாவில் உள்ள நாகபட்டினத்தில் பிறந்து (1670), யாழ்ப்பாண பட்டினத்தில் இறந்த (1693) Gerardus Van Rhee என்பவரது நினைவுக்கல். இவர் தன் வாழ்நாளில் யாழ்ப்பாணப்பட்டினத்தில் கணக்காளர், தலமை எழுதுவினைஞர், நூலக மேற்பார்வையாளர் போன்ற பதவிகளை வகித்திருந்தார்.

யாழ்கோட்டை ஒல்லாந்த நினைவுக்கற்களிலிருந்து ஒல்லாந்த மொழிச் சொற்கள், பெயர்கள் என்பவற்றையும், ஒல்லாந்தர்கால எழுத்து, மொழி என்பவற்றையும் அறியமுடிகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணம் "JAFFNAPATNAM, IAFFNAPATNAM" (யாழ்ப்பாணப்பட்டிணம்) என அழைக்கப்பட்ட முறையை இக்கல்வெட்டுக்களில் இருந்து தெளிவாக காணமுடிகின்றது. இது ஐரோப்பியர் ஆட்சிக்கு முற்பட்ட காலத்திலிருந்து அதிலும் குறிப்பாக நல்லூர் இராசதானிக் காலத்திலும் யாழ்ப்பாணம் என்ற பெயர் பயன்படுத்தப்பட்டத்திற்கு

இக்கல்வெட்டுக்களில் பல இடங்களில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கும் ‘‘யாழ்ப்பாணப்பட்டிணம்’’ எனும் சொல் ஆதாரமாகும். ஆரியச்சக்கரவர்த்திகளிடமிருந்து நல்லூர் இராசதானியை கைப்பற்றிக்கொண்ட ஐரோப்பிய இனத்தவர்கள் யாழ்ப்பாணம் எனும் சொல்லினை அறிந்திருந்தமையின் தொடர்ச்சியினையே ஒல்லாந்த நினைவுக்கல்வெட்டுக்களுடாக காணமுடிகின்றதெனலாம்.

மேலும் 1675ஆண்டுக்குரிய நினைவுக்கல் ஒன்றின் மூலமாக பறன்ற்வான் ஸ்கைலன் பேர்க் (Barent van Schuylenburg) என்ற மன்னாரில் 1665இல் இருந்த படைகளுக்கு தலைமை தாங்கிய படைத்தலைவரின் கீழ் 78 ஜேர்மனியரும் இருந்தனர் என ஆளுனர் அறிக்கை குறிப்பிடுவதில் இருந்து (Penry Lewis.J, 1993. 216), ஒல்லாந்த நாட்டு படைவீரர்கள் மட்டுமன்றி (Zaandam, Amesterdam) வேறு நாட்டு படைவீரர்களும் ஒல்லாந்த படை அமைப்பில் இடம்பெற்றுள்ளனர் என்பதையும் காணமுடிகின்றது. மற்றும் கொழும்பு, மன்னார், காலி, யாழ்ப்பாணம் போன்ற இடப்பெயர்கள் நினைவுக்கற்களில் இடம்பெறுவதைக் கொண்டு ஒல்லாந்தரின் கரையோர ஆட்சியில் முக்கிய மையங்களாக இவை விளங்கியிருந்ததென்பதனையும் காணமுடிகின்றது. வரலாற்று ஆவணங்களிலிருந்து ஒல்லாந்தரின் யாழ்ப்பாண ஆட்சி 1658 – 1796 ஆண்டு வரையான காலப்பகுதியை உள்ளடக்கியிருந்ததென்பதை அறியமுடிகின்றது. இங்கு கிடைக்கப்பெற்ற நினைவுக்கற்கள் குறிப்பிடும் காலம் 1666ஆம் ஆண்டு நினைவுக் கற்களிலிருந்து 1788ஆண்டு வரையான நினைவுக்கற்கள் காணப்பட்டமை இக்கருத்தை ஓரளவு உறுதிப்படுத்துவதாகவுள்ளது.

ஒல்லாந்தர் கீழைத்தேச நாடுகளினைக் கைப்பற்றிக் கொண்டமைக்கான முக்கிய நோக்கம் வர்த்தக இலாபம் பெறுதலும், தமது மதமான புரட்டஸ்தாந்து மதத்தை பரப்புதலுமாகும். இதனை இவ்நினைவுக்கற்களும் தெளிவாக புலப்படுத்தி நிற்கின்றது. குறிப்பாக வர்த்தக நோக்கத்தினை மரம், கப்பல் போன்ற குறியீடுகள் இவ்நினைவுக்கற்களில் இடம்பெறுவதைக் கொண்டு அறியலாம். ஏனெனில் ஒல்லாந்தரின் யாழ்ப்பாண வர்த்தக இலாபத்தின் ஒரு பகுதியானது நெல், பருத்தி, சாயத்துக்குரிய மரச்செய்கை, புகையிலை, பருத்தி, பனம்பொருட்கள், மரம் என்பனவற்றில் தங்கியிருந்தது (குணசிங்கம். மு. 2008. 255 - 290). Devreede, Amesterdam போன்ற பெயர்களினையுடைய கப்பல்களில் வந்த படைத்தலைவர்கள் பற்றிய செய்திகளை நினைவுக்கற்கள் குறிப்பிடுவதிலிருந்து ஒல்லாந்தர்கால கப்பல் போக்குவரத்தையும், அதனூடாக வர்த்தக முக்கியத்துவத்தையும் அறியமுடிகின்றது. மத நோக்கத்தினை 1679ஆம் ஆண்டுக்குரியதான யாழ்கோட்டை நினைவுக் கல்வெட்டிலிருந்து அறியப்பட்ட படைத்தலைவர் லோறன்ஸ் பீல் வட்டுக்கோட்டை தேவாலயத்தை அமைத்துள்ளார் என்பதை இத்தேவலாய முகப்பில் உள்ள கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இவ்ஒல்லாந்த மொழிச்சாசனம் பின்வருமாறு:

Doen Maken Door Den Heer

Commadeur Laurens Pyl

Anno 1678

சேனைத்தலைவன் அல்லது படைத்தலைவன் லோறன்ஸ் பீலினால் (இது) 1678ஆம் ஆண்டு கட்டுவிக்கப்பட்டது (இந்திரபாலா.க.1960.28).

மேலும் 1731ஆம் ஆண்டு நினைவுக்கல்லில் Elbregt Brehgman காலியில் ஞானஸ்தானம் பெற்றமை போன்ற செய்திகள் ஒல்லாந்தர் கால மதம் பற்றிய செய்திகளை தருகின்றது. அத்துடன் சில நினைவுக்கற்களில் வாழ்வின் நிலையாமை பற்றிய கவிதைகள் மற்றும் மணற்கடிகார (or Hour Glass) உருவப் பொறிப்பு என்பவற்றினையும், இறப்பின் அடையாளமாக மண்டைஓடு, எலும்பின் உருவங்களினை காணமுடிகின்றது. உதாரணமாக 1737ஆம் ஆண்டுக்குரிய நினைவுக் கல்லொன்றின் முதல் இரு வரிகளில் ‘‘மரணம் எங்களுக்குச் சுவர்க்கத்திற்கான வழிகாட்டுதலைத் தருகின்றதுடன், துன்பத்தின் முடிவாகவும் இருக்கின்றது’’ என பொறிக்கப்பட்டிருக்கும் கவிதையினைக் குறிப்பிடலாம்.

ஒல்லாந்தர் நினைவுக்கற்கள் மற்றும் அவ்நினைவுக்கற்கள் காணப்பட்டிருந்த கோட்டை, கோட்டை தேவாலயம் என்பவற்றின் மூலம் ஒல்லாந்த கட்டிடக்கலை மரபை அறியமுடிகின்றது.

முன்பு போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட கோட்டையினையே ஒல்லாந்தர் ஐங்கோணவடிவில் மாற்றியமைத்ததுடன், ஐந்து கொத்தளங்கள் கொத்தளம் ஐந்தையும் உள்ளடக்கியதாக உட்கோட்டை 34 ஏக்கர் பரப்பளவினை கொண்டும், கட்டிடக்கலை சிறப்பு வாய்ந்த மதில்சுவர், கோட்டையைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த அகழி, கோட்டைக்குள்ளிருந்த சிலுவை வடிவத் தேவாலயத்தின் சுவர்கள் நான்கு அல்லது ஐந்து அடிகள் தடிப்பானவை. தரையில் இரண்டு அடிச் சதுரப்பொழிகற்கள் பதிக்கப்பட்டிருந்தன (Kulenthiran.S. 1967.4 – 6). பொதுவாக ஒல்லாந்தரின் கட்டிடங்களில் இத்தகைய நேர்த்தியைக் காணலாம். மேலும் தூண்கள், வளைவுகள், கதவுகளின் சுற்று நிலைகள் என்பன இறக்குமதி செய்யப்பட்ட செங்கற்களைக் கொண்டு அழகுபடுத்தப்பட்டிருந்தன. எனினும் கோட்டையின் ஏனைய பகுதிகள் சுண்ணக்கல், முருகைக்கற்கள் கொண்டு பலமாக அமைக்கப்பட்டு தொடர்ந்து பிரித்தானியரின் இராணுவத் தளமாகவும் தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளில் இவ்யாழ்ப்பாணக்கோட்டை முக்கியம் பெறக்காரணம் அதன் அமைப்பு முறையேயாகும். இவ்வாறு ஒல்லாந்த தொழில்நுட்ப கட்டிடக்கலைப்பாணிக்கு ஓர் அரிய சான்றாதாரமாக விளங்கும் இக்கோட்டை கீழைத்தேசத்திலேயே பலம் வாய்ந்த கோட்டைகளில் ஒன்றாக விளங்குகின்றது. இதனைவிட இக்கோட்டை தேவாலயத்தின் தென் பக்கப்பகுதியில் அமைக்கப்பட்டதாக அறியப்பட்ட வேலைப்பாடு நிறைந்த சில நினைவுக்கற்பொழிவுகள், நீண்ட நீள்சதுர அமைப்பில் ஒல்லாந்த மொழி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டும் பல்வேறு குறியீடுகள் கொண்டதாகவும் கருங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளது. கருங்கல்லின் மீது செதுக்கப்பட்டிருந்த உருவங்கள், குறியீடுகள் கலைநயமிக்கவையாகும். இவ்நினைவுக்கற்கள் அமைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட கருங்கற்கள் வேறிடத்திலிருந்து கொண்டுவரப்பட்டதாக இருக்கலாம். இவ்வாறு கலைநயம் நிறைந்த இவ்நினைவுகற் பொழிவுகளிலும் அக்கால கலைநயத்தை அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் இவ்நினைவுக்கற்கள் பலவற்றில் வேறுபட்ட உருவப்பொறிப்புக்களை காணமுடிகின்றது. குறிப்பாக அன்னம், கழுகு போன்ற பறவை உருவங்கள், மான், நாய் போன்ற விலங்கு உருவங்கள், பாய்மரக்கப்பல், கடல், கட்டிடம், மரம், கொடி, பாத்திரம் (Small tea pot) போன்ற உருவங்களை குறிப்பிடலாம். இவ்உருவங்கள் ஒல்லாந்தர் கால பொருளாதார நடவடிக்கை புலப்படுத்தும் உருவபொறிப்புக்களாக குறிப்பிடமுடியும். அத்துடன் அவை ஒல்லாந்த குடும்பங்களுக்குரிய குறியீட்டு (Family Flag) உருவங்களாகவும் கருதலாம்.

ஒல்லாந்த சமூக அமைப்பு பற்றியும் இவ்நினைவுக்கற்களினால் அறியமுடிகின்றது. இறந்தவர்களுக்கு நினைவுக்கல் அமைக்கும் வழக்கம், உறவுமுறை, குடும்ப அமைப்பு மற்றும் பலதாரமணம் பற்றிய செய்திகள் என்பவற்றை இவ்நினைவுக்கற்களின் ஊடாக அறியமுடிகின்றமை இதற்கு ஆதாரமாகும். இவ்வாறு இவ்கருங்கல் நினைவுகற்பொழிவுகளில் ஒல்லாந்த மொழி எழுத்துக்கள் பொறிக்கப்பட் வகையில் அதனூடாக ஒல்லாந்தர் நிர்வாகமுறை, பதவிப்பெயர், ஆட்சிக்காலம், இராணுவக்கட்டமைப்பு, மதம் பற்றிய செய்திகள், சமூக அமைப்பு, கட்டிடக்கலை, வர்த்தகம், நினைவுக்கல் அமைக்கும் மரபு, எழுத்து, மொழி, ஒல்லாந்தர்களது ஆட்சி விஸ்தரிப்பு போன்ற பல்வேறுபட்ட செய்திகளை அவதானிக்க முடிகின்றது.

**யாழ்கோட்டை ஒல்லாந்த நினைவுக்கற்களின் விபர அட்டவணை**

| | Inscription Year | Name |
|---|---|---|
| 1 | 1666.August 27 | MARGARITA HEYNEN |
| 2 | 1672.September | MARTEN HUISMANS |
| 3 | 1672.August. 15 | JORIS HARTSTNCK |
| 4 | 1675.September.23 | BARENT VAN SCHUYLEN BURG |
| 5 | 1679.September.22 | LAURENS PYL |
| 6 | 1693.February.12 | SUSANNA BLOM |
| 7 | 1693.July.30 | GERARDUS VAN RHEE |
| 8 | 1694.July.03 | FLORIS BLOM |

| | | |
|---|---|---|
| 9 | 1705.April.06 | FRAMCOIS VANDE SANDE |
| 10 | 1705.November.07 | BARTA AUGUSTIN |
| 11 | 1727.May.22 | SWEM ANDERSON |
| 12 | 1729.February.10 | ARNOLD MOLL |
| 13 | 1731.October.25 | ELBREGT BRENGAN |
| 14 | 1737.April.28 | JURPIAAN POTKEN |
| 15 | 1737.Dec.13 | IMAN DE – JONGE |
| 16 | 1741.May.15 | DANIEL AGREEN |
| 17 | 1745.Jan.07 | CHRISTOPHER KLEYBERT |
| 18 | 1749.March.09 | ABRAHM AARNOUTSZ |
| 19 | 1751.Oct.12 | SUSANNA ANTHONIA DE JONG |
| 20 | 1766. July.30 | JOHANNA VERWYK |
| 21 | 1767.January. 01 | ANTHONY MOOYAART |
| 22 | 1769. March.26 | FEIE DRICH WILHELM, BARON DE REDER |
| 23 | 1773. December. 16 | JOHANNA DEVOS |
| 24 | 1787.September.07 | GALLANT JEAN FRANCOIS EVEN DUHIL |
| 25 | 1788.June.15 | MARIA SOPHIADE BOCK |
| | **காணமல்போயுள்ள நினைவுக்கற்கள் சில** | |
| 1. | 1741.May.15 | MARIA SOPHIA DE JONG |
| 2. | 1748.Nov.18 | JULIUS ABRAHAM AARNOUT SEN |
| 3. | 1749. Aug.23 | MARIA SOPHIA DE JONG |
| 4. | 1766.July.30 | JOHANNA WIRMAN |
| 5. | 1774.Jun.23 | HENDRINA PHILIPNA NAGEL |
| | | |

## 5. முடிவுரை

யாழ்கோட்டை தேவாலயப்பகுதியில் 2017ஆம் ஆண்டு இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகளின் போது போர்த்துக்கேயர் வருகைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரான பண்பாட்டினை வெளிப்படுத்தும் தொல்லியல் எச்சங்கள் கிடைக்கப்பெற்றிருந்தது. இவ்வாறு யாழ்கோட்டை அமைந்துள்ள பிரதேசமானது தொன்மை சிறப்பு வாய்ந்ததென்பதனை அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகள் வரை உறுதிபடுத்தி நிற்கின்றன. இதன் தொடர்ச்சி நிலையிலேயே ஐரோப்பியர்கால நினைவுச்சின்னமான யாழ்கோட்டையினை அடையாளப்படுத்த முடிகின்றது. யாழ்கோட்டையானது ஒல்லாந்த கட்டிடக்கலை சிறப்பினை இன்றுவரை பிரதிபலித்துநிற்கின்றது. இங்கு அமைக்கப்பட்டிருந்த தேவாலயம் மற்றும் தேவாலய சுவர்ப்பகுதி, நிலப்பகுதியில் அமைக்கப்பட்ட நீள்சதுர கருங்கல் பொழிவுகள் வரலாற்று முக்கியம் பெற்றவையாகும். இவ்கருங்கல்பொழிவுகள் ஒல்லாந்தர்களது நினைவுக்கற்களாகவே அடையாளப்படுத்த முடிகின்றது. இவ்நினைவுக்கற்கள் ஒல்லாந்தர்கால அரசியல், பொருளாதார, சமூக, சமய வரலாற்றினை அறிந்துகொள்ளும் நம்பகத்தன்மையுடைய ஆதாரங்களாக விளங்குகின்றன. யாழ்கோட்டையில் அமைக்கப்பட்ட ஒல்லாந்தர் நினைவுக்கற்கள் போன்று இலங்கையின் பிறபகுதிகளில் உள்ள ஒல்லாந்த தேவாலயங்களிலும் காணமுடிகின்றது. எதிர்காலங்களில் ஏனைய தேவாலயங்களில் உள்ள நினைவுக்கல்வெட்டுக்களுடன் இவ்நினைவுக்கல்வெட்டுக்களினை ஒப்பிட்டு ஆராய்வது பயனுள்ளதாக அமையும். மேலும் யாழ்கோட்டையில் அமைக்கப்பட்டிருந்த நினைவுக்கற்கள் பலவும் முறையான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு அற்றவிதத்திலேயே காணப்படுகிறது. இவ்நினைவுக்கற்களினை மீளவும் ஒன்றாக யாழ்கோட்டையினுள் வைத்து பாதுகாக்கப்படுவதுடன், தொலைந்துபோயுள்ள ஏனைய நினைவுக்கற்களினையும் கண்டுபிடித்து ஒன்றுசேர்ப்பது அவ்நினைவுக்கற்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி நிற்கும். மேலும் யாழ்கோட்டை தேவாலயப் பகுதியில் கடந்த காலத்தில்

தொல்லியல் ஆய்வுகள் இடம்பெற்றிருந்த போதிலும், மேலதிக தொல்லியல் ஆய்வுகள் இடம்பெறுவதுடன் இத்தேவாலயத்தினை விரைவில் மீள்புனரமைப்பு பணிகளுக்கு உட்படுத்த வேண்டும். இவ்வாறு யாழ்கோட்டை தேவாலயம் மற்றும் நினைவுக்கற்களினை முறையாக பாதுகாப்பு, பராமரிப்பு செயற்பாட்டிற்குள் உட்படுத்தடும்போது, அவை ஐரோப்பியர்கால வரலாற்று ஆய்வில் நம்பகத்தன்மையுடைய ஆதாரமாக விளங்கும். அத்துடன் யாழ்குடாநாட்டின் முக்கிய சுற்றுலாவுக்குரிய வளங்களாக யாழ்கோட்டை மற்றும் அதனுடன் இணைந்த தேவாலயம், நினைவுக்கற்கள் என்பன திகழும் அதேவேளை சுற்றுலாத்துறை வளர்ச்சியிலும் அவை குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்க முடியும்.

**உசாத்துணை நூல்கள்**

Davis, C. Coningham, R. Gunawardhana, P. Pushparatnam, P. Schmidt, A. and Manuel, M. (2019) "The antiquity of Jaffna Fort: new evidence from post-disaster archaeological investigations in northern Sri Lanka," *ANTIQUITY*, Cambridge University Press, 93(368), p. e13. doi: 10.15184/aqy.2019.30.

De Silva.R, Rajpal Kumar. (1988). IIustrations and Views of Dutch Ceylon 1602 - 1796: A Comprehensive Work of Pictorial Reference With Selected Eve – Witness Accounts. Brell Archive. Pp.310 – 312. ISBN 9789004089792.

Martyn. H. John. (1923). Notes on Jaffna. Chennai : Asian educational services.

Nelson, A.William (1984). '*Dutch Forts of Sri Lanka'*, Littlehampton Book Services Ltd, illustrated Edition.

Penry Lewis, J. (1993). Tombstones and Monuments in Ceylon, New Delhi: NAVRANG booksellers and publishers.

Philip Baldaeus. (1998). (first edi 1672) 'A Description of the Great and Most Famous Isle of Ceylon'. New Delhi: Asian Educational Services.

Kulenthiran. (1967). The Kruys Kerk of Jaffnapatam (The church in the Dutch fort. Jaffna Ceylon: A.C.M Press.

Rajan, K. (2000). *South Indian Memorial Stones*. India: Manoo Pathippakam. pp.26 – 29.

இந்திரபாலா, கா. (1960). 'யாழ்ப்பாணத்துச் சாசனங்கள்'. இளங்கதிர், 12வது மலர். தமிழ்ச்சங்கம் இலங்கைப் பல்கலைக்கழகம்.

இராஜன், கா. (1994). கொடுமணல் அகழ்வாய்வு ஓர் அறிமுகம். தஞ்சாவூர் : பதிப்பகம்.

குணசிங்கம், மு. (2008). 'இலங்கையில் தமிழர் ஓர் முழுமையான வரலாறு', சிட்னி: தென் ஆசியாவில் மையம்.

இராசநாயகம், செ.(1999). யாழ்ப்பாணச் சரித்திரம், ஏசியன் எடுகேஷனல் சர்வீசஸ்.

சிவசாமி, வி. (2014). இலங்கையில் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் கால நிர்வாகமுறை – ஓர் ஒப்பியல் ஆய்வு, இலங்கை வரலாறு (கி.பி 1505 – 1796), (ப.அ) அருந்தவராஜா. க. கட்டுரைத் தொகுப்பு, நல்லூர் ப. 87 – 98.

கிருஸ்ணராஜா. செ. (2000), இணுவில் காரைக்கால் சிவன் கோயில் சிவலிங்கம் பஞ்சதனங்களில் ஒன்றா?, சோதிப்பெருமான் Felition இதழ் 01, இணுவில் மத்திய கல்லூரி.

## Jaffna Fort




## Jaffna Fort – Dutch Church ruins



**European Memorial Stone in Jaffna Fort**

